# தமிழ் நாடு உள்ளாட்சி அமைப்புகள் முறைமன்ற நடுவம்

எண். 100, அண்ணா சாலை, கிண்டி, சென்னை- 600 032.
தொலைபேசி : 044- 22201337
மின்னஞ்சல் முகவரி : ombudsmanlocal@tn.gov.in

தமிழ்நாடு உள்ளாட்சி அமைப்புகள் முறைமன்ற நடுவர்,
சென்னை- 600 032.

முன்னிலை : முனைவர் சோ. அய்யர், இ.ஆ.ப., (ஓ)

*******

முறையீட்டு மனு எண். **083/ந/2018**

ஆணை எண். **137/2018**

நாள் : **08/06/2018**

**திரு மா. எபனேசர் பால்,**
**மார்த்தாண்டம் – 629 165.** – **முறையீட்டு மனுதாரர்**

நகராட்சி ஆணையாளர்,
குழித்துறை நகராட்சி, – **எதிர் மனுதாரர்**
குழித்துறை.

கன்னியாகுமரி மாவட்டம், குழித்துறை நகராட்சி, சிங்கிலேயர் வார்டு, எண்.27/159, பருத்திவிளை முகவரியில் வசிக்கும் திரு மா. எபனேசர் பால் அவர்களின் 12.04.2018 நாளிட்ட முறையீட்டு மனு இம்முறைமன்ற நடுவத்தில் பெறப்பட்டு, 83/2018 எண்ணிட்ட முறையீட்டு மனுவாகப் பதிவு செய்யப்பட்டது. மனுதாரரின் முறையீட்டு மனு மற்றும் குழித்துறை நகராட்சி ஆணையரின் அறிக்கை பரிசீலிக்கப்பட்டு, கீழ்காணும் ஆணை வெளியிடப்படுகிறது :-

## ஆணை

கன்னியாகுமரி மாவட்டம், குழித்துறை நகராட்சி, சிங்கிலேயர் வார்டு, எண்.27/159, பருத்திவிளை முகவரியில் வசிக்கும் திரு மா. எபனேசர் பால் என்பவர், தனியார் ஒருவர் ஆக்கிரமிப்பு செய்துள்ள அரசுப்புறம்போக்குக் காலிமனையை கையகப்படுத்த குழித்துறை நகராட்சி எந்தவித நடவடிக்கையும் மேற்கொள்ளவில்லை என்றும், நகர் மன்ற முறைகேடுகள் சம்பந்தமாக தமிழ்நாடு உள்ளாட்சி அமைப்புகள் முறைமன்ற நடுவத்தை நாடலாம் என்பதினை தமிழ் நாளிதழில் வெளியான செய்தி மூலம் அறிந்து மேற்குறிப்பிட்ட ஆக்கிரமிப்பினை அகற்ற நடவடிக்கை எடுக்கக்கோரி இம்முறைமன்ற நடுவத்தில் முறையீடு செய்துள்ளதாகக் குறிப்பிட்டுள்ளார்.

2. மனுதாரரின் முறையீடு சம்பந்தமாக குழித்துறை நகராட்சி ஆணையரின் அறிக்கை பெறப்பட்டது. கிராம ஆவண 'அ' பதிவேட்டின் படி C5/118 எண்ணிட்ட நகரளவை நிலம் அரசுப்புறம்போக்கு கிணறு என வகைப்படுத்தப்பட்டுள்ளதென்றும், திரு W.F. சதீஸ் மற்றும் கீதா என்பவர்களால் ஆக்கிரமிக்கப்பட்டிருந்த மேற்குறிப்பிட்ட நிலம் 18.12.2015 அன்று ஆக்கிரமிப்பு அகற்றப்பட்டு சுற்றுவேலி அமைக்க நடவடிக்கையில் இருந்தது என்று நகராட்சி ஆணையர் தெரிவித்துள்ளார். இந்நிலையில், மேற்குறிப்பிட்ட அரசுப் புறம்போக்கு நிலம் வேறு ஒரு நபரால் ஆக்கிரமிக்கப்பட்டுள்ளதைக் கண்டறிந்து, வருவாய் துறையினர் மூலம் நில அளவை செய்து 03.05.2018 அன்று நகராட்சியால் ஆக்கிரமிப்பு அகற்றப்பட்டது என்று தெரிவித்துள்ளார். ஆக்கிரமிப்பு அகற்றப்பட்ட விவரம் பத்மநாமபுரம் கோட்ட சார் ஆட்சியருக்கும்03.05.2018 நாளிட்ட கடிதத்தில் தெரிவிக்கப்பட்டுள்ளது. நகராட்சி ஆணையர் ஆக்கிரமிப்பு அகற்றப்பட்டதைக் குறிப்பிடும் புகைப்படங்களையும் இம்முறைமன்ற நடுவத்தில் சமர்ப்பித்துள்ளார்.

3. முறையீட்டு மனுதாரர் குறிப்பிட்டிருந்த ஆக்கிரமிப்பு அகற்றப்பட்டதை உறுதி செய்யும் பொருட்டு, 06.06.2018 அன்று நடைபெறவிருந்த விசாரணைக்கு மனுதாரர் அழைக்கப்பட்டிருந்தார். மனுதாரர் மேற்குறிப்பிட்ட நாளில் விசாரணைக்கு வருகை தரவில்லை. எனினும், முறையீட்டு மனுதாரரின் கோரிக்கை குறித்த நேர்வில் உரிய நடவடிக்கை மேற்கொண்டு ஆக்கிரமிப்பு அகற்றப்பட்டு விட்டது. இதுபோன்ற ஆக்கிரமிப்புகள் பொதுமக்களால் சுட்டிக்காட்டப்பட்டு நடவடிக்கை எடுக்கப்படாமல் உள்ளாட்சி அமைப்புகள் முறைமன்ற நடுவத்தின் தலையீட்டின் பேரிலேயே அகற்றப்பட்டுள்ளது என்பது நிர்வாகத்தின் ஆரோக்கிய நிலையை குறிக்காது. எனவே, எதிர்காலத்தில் இதுபோன்ற ஆக்கிரமிப்புகள் தாமதமின்றி உள்ளாட்சி அமைப்புகளே தானே முன்வந்து அகற்றிட வேண்டும் என்று சுட்டிக்காட்டி, இந்நேர்வின் மீதான நடவடிக்கையை இந்நிலையிலேயே முடித்துக் கொள்ள முடிவு செய்து அவ்வாறே இம்முறைமன்ற நடுவம் ஆணையிடுகிறது.

2018– ஆம் ஆண்டு, ஜூன் திங்கள், 8–ஆம் நாளன்று, என்னால் கையொப்பமிடப்பட்டு, அலுவலக முத்திரையிட்டு ஆணையிடப்படுகிறது.

--//ஒப்பம்//--
தமிழ்நாடு உள்ளாட்சி அமைப்புகள் முறைமன்ற நடுவர்

சென்னை–600 032

/ஆணைப்படி அனுப்பப்படுகிறது/

13/6/18
செயலாளர்.

13/6/18

பெறுநர்

1. திரு மா. எபனேசர் பால்,
27/159, பருத்திவிளை,
சிங்கிலேயர் வார்டு,
குழித்துறை நகராட்சி,
மார்த்தாண்டம் – 629 165.

2. நகராட்சி ஆணையாளர்,
குழித்துறை நகராட்சி,
மார்த்தாண்டம் அஞ்சல்,
கன்னியாகுமரி மாவட்டம்.

நகல் : முறைமன்ற நடுவரின் நேர்முக எழுத்தர்
பிரிவு அலுவலர் (நிர்வாகம்)
பேரூராட்சி பிரிவு – 3
இ.கோ. / உதிரி